28th February 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சர்க்காரால் வெளியிடப்படும் "கெஜட்" இன்னும் ஆங்கிலத்தில் வருகிறது. அதை எப்போது முதல் தமிழில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "கெஜட்" பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Monuments

*113 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the steps taken by the Madras Government in safeguarding the monuments like forts and palaces located at Vellore, Thanjavur, Gingee and Madurai ?

நினைவுச் சின்னங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேலூர், தஞ்சாவூர், செஞ்சி, மதுரை ஆகிய இடங்களில் இருக்கும் கோட்டைகள், அரண்மனைகள், முதலிய நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கத் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (1) வேலூர்க்கோட்டை—இக்கோட்டை தற்போது இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்படுகிறது. அங்குள்ள கோயில் உட்பட இக்கோட்டையையும் அதைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசை இம்மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டு வந்துள்ளது. இந்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. அக்கோட்டையை இந்த மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கச் சம்மதிக்குமாறு இந்திய அரசை வலியுறுத்தக் கருதப்பட்டுள்ளது.

(2) செஞ்சிக்கோட்டை—இக்கோட்டை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

(3) தஞ்சாவூர் கோட்டை :—இக்கோட்டையை மாநிலப் பொதுப் பணித்துறையினர் இப்போது பேணிவருகிறார்கள். மாநிலச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னமாக இதைப் பாதுகாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(4) திருமலை நாயக்கர் மகால், மதுரை:—தற்போது இது மாநிலப் பொதுப்பணித் துறையினரின் பொறுப்பில் உள்ளது. மாநிலச் சிறப்புமிக்க தொல்பொருள் நினைவுச் சின்னமாக இந்த மகாலைப் பேண முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை எதிர்காலத்தில் பேணி வருவதற்காக, பொதுப் பணித் துறை இதனை மாநிலத் தொல்பொருள் துறையிடம் விரைவில் ஒப்படைக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மதுரையில் திருமலை நாயக்கர் மகால் சமீபத்தில் பழுதடைந்து விட்டதாகவும், அதை மராமத்துப் பார்க்க போவதாகவும் தெரிந்தது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதை பொதுப்பணித் துறை இதுநாள் வரை பேணி வந்தது. இப்போது அதைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பையும் மாநிலத் தொல்பொருள் துறையிடம் செலுத்தும் முயற்சிகள்தான் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.